# விபஸ்ஸனா

செய்தி மடல்

(விபஸ்ஸனா : ஸயாஜி ஊபாகின் வழிமரபில், திரு சத்திய நாராயண கோயங்கா அவர்களால் போதிக்கப்படும் தியான முறை)

அக்டோபர் **2020**

(தொகுப்பு 30 எண் 11 , அக்டோபர் 1, 2020 ).

விபாசனா ஆராய்ச்சி நிறுவனத்தின் மாதாந்திர பிரசுரம்

வலை தளம் www.vridhamma.org International website: www.dhamma.org


---

## தம்மா பொன்மொழிகள்

அதிதம் நான்வாகமேய்ய, நப்படிகங்கே அனாகதம்.

யததீதம் பஹீனந்தன், அப்பத்தஞ்ச அனாகதம்.

பச்ப்பன்னஞ்ச யோ தம்சு மன்தத்த விபஸ்ஸதி.

அஸம் ஹீரம், அஸம் குப்பம் தம், வித்வா மனுப்ஹறயே


ம.னி. உபரிபண்ணாஸபாளி - 272, விபங்கவக்கோ

ஒருவர் கடந்த காலத்தில் முழ்கி இருக்கவோ, எதிர்காலத்தை எதிர்பார்த்தோ. வாழக் கூடாது

கடந்த காலம் முடிந்துவிட்டது, எதிர்காலம் இன்னும் வரவில்லை.

இருப்பதை நுண்ணறிவுடன் கவனிக்கவும்

முன்கூட்டியே அமைதி குறையாமலும், அசைக்க முடியாத மன உறுதியுடனும் ஞானிகள் இருக்க வேண்டும்


திரு எஸ்.என். கோயங்கா (1924 - 2013) மற்றும் திருமதி இல்லச்சிதேவி (மாதாஜி- 1929 - 2016) தம்மா ஹால் எண். 1 ல் மெட்டா கொடுப்பது.

## தம்மத்தில் நம்பிக்கை

“நம்பிக்கை என்பது தம்மத்தை நோக்கியது, என்னை அல்ல. எனக்குள் தம்மம் இருக்கிறது. அதனால் நம்பிக்கை இருக்கிறது. அறியாமை காரணமாக, நாளை நான் தம்மத்தை விட்டு வெளியேறினால், பிறகு விசுவாசத்தையும், நம்பிக்கையையும் விட்டுவிலகினேன் என்று பொருள்படும். நம்பிக்கை எப்போதும் தம்மாக்குத்தான். பல ஆண்டுகளாக நான் இங்கே சேவை செய்கிறேன். தம்மாக்கு எதிராக இப்போது வரை எதுவும் செய்ததில்லை. எனவே, நம்பிக்கை வைத்திருப்பது இயற்கையானது. உங்கள் விசுவாசத்திற்காக நான் நன்றி கூறுகிறேன்.

தம்மத்தில் ஏதோ ஒரு சக்தி இருக்கிறது, இதன் காரணமாக எல்லோரும் அதை விரும்புகின்றனர். நல்லவை நடைபெறச் தம்மச்சக்தி துணை புரியும். தம்மத்தில் பாகுபாடு இல்லை. என் பிரிவைப் பின்பற்றுபவர்

நலனைப் பெறுங்கள் வெவ்வேறு பிரிவுகளை சார்ந்தவர்களுக்கு துன்பங்கள் ஏற்படட்டும் என்று இவ்வாறு வேறுபாடு காட்டுவது தம்மா அல்ல. அவர்கள் வேறு பிரிவுகளை சார்ந்தவர்கள் அவ்வளவே. அனைவரும் நலமுடன் வாழவேண்டும்.

புத்தர் தனது போதனையை ஒரு பிரிவினருக்கு மட்டும் என வேறுபாடு காட்டவில்லை. அதுதான் புத்தரின் சிறப்பு. நாம் கண்டிப்பாக அந்தச் சிறந்த கொள்கயை பராமரிக்க வேண்டும். தம்மம் என்றென்றும் பராமரிக்கப்பட வேண்டும்.

(- எஸ்.என்.கோயங்கா கேள்வி பதில்: சர்வதேச ஏ.டி. கூட்டம் 2012 தம்மகிரியில்)

ஆசிரியர் அவர்களின் மறைவு நாள் , 29 செப்டம்பர், (2013).- நினைவுகூர்ந்து எங்கள் பணிவான வணக்கம் கலந்த மரியாதை செலுத்துகிறோம்.

---

## ஆரம்ப இடையுருகளுக்குப் பின்னர் வெற்றி

(சகோதரர் பாபு வுடன் தொடர்பு கொண்ட கடிதத்திலிருந்து சில பகுதிகளின் தொடர்ச்சி)

கோயங்காஜி அவரது, முதல் சகோதரர் பாபுபுலால் கோயங்கா (பாபு பஹியா) அவருக்கு எழுதிய கடிதத்தின் முதல் பகுதியில் 1969 இல் இந்தியாவில் நடைபெறவிருந்த மூன்றாவது விபாசனா முகாம் பற்றி விவரிக்கும் பகுதி கடந்த மாதம் வி.என்.எல் வெளியிடப்பட்டது .கோயங்காஜி அவர்கள், பங்கேற்கும் சில தியானிகள் பற்றிய விவரங்களின் பகுதிகள் மற்றும் மியான்மரில் உள்ள சயாகி யு பா கின் வழிகாட்டுதலைப் நாடி அவரது மூத்த சகோதரருக்கு எழுதிய கடிதத்தின் சில பகுதிகளை இந்த இதழில், நாங்கள் சேர்க்கிறோம் - ஆசிரியர்.

---

நேமானிவாடி பவன் முகாம் விவரங்கள் (மும்பை)

ஆகஸ்ட் 1969

புது தில்லி - 29 செப்டம்பர் 1969

பாபு பஹியா

பிரணாம்! (வாழ்த்துக்கள்!)

... மன உளைச்சல்களால் அவதிப்பட்ட எனக்குத் தெரிந்த ஒரு தியானி இந்த முகாமில் கலந்து கொண்டார். பயிற்சி தொடங்க சில நிமிடங்களுக்கு முன்பு அவரும் தியான பாடபயிற்சிக்கு அமர விரும்பினார். பாடத்திட்டத்தில் சேர்ந்திருந்த அனைவருமே வந்திருந்தனர். பின்னர் நான் அவரை அமர வேண்டாம் என்று சொல்லவில்லை. அவர் மீது கூடுதல் கவனம் செலுத்த தற்பொழது இயலாது. அவர் அமரட்டும், அவர் ஒரு சிறிய பரமியைக் பெற்றால் கூட அவருக்கு அது நன்மை என நினைத்தேன். அறிமுக ஆனாபானா அமர்வின் போது அவர் அசாதாரணமாக நடந்து கொள்ளத் தொடங்கியது என்னை கலக்கத்திற்கு உட்படுத்தியது. நான் ஆனாபானா செயல் முறை அறிவுறைகளை அளித்த போது அவர் பெரிதும் பலமாக சுவாசிக்கத் தொடங்கினார். அதை நிறுத்த வேண்டியிருந்தது. இருப்பினும், நான் அவரிடம் பேசியபோது, சமநிலையற்ற எந்த அறிகுறிகளையும் நான் காணவில்லை. அவ்வப்போது நான் மெட்டா உணர்வுடன், அவரது தம்ம உறுதிமொழியை அவரால் நிறைவேற்ற இயலலாம் என நினைத்தேன். ஆனால் தியானத்தின் தாக்கம் மிகவும் வலுவானதாகவும் அவருக்கு தாங்க இயலாமலும் ஆயிற்று. ஒரு நாள் அவரது மைத்துனர் அவரைச் பார்க்க வந்தார். அவரை வீட்டிற்கு அழைத்துச் செல்ல விரும்புவதாக வலியுறுத்தினார். அவரை ஒரு பங்கேற்பாளராக ஏற்றுக்கொண்ட பின்னர் முகாம் நிறைவு பெறும் முன் அவரை அனுப்புவது எனக்கு ஆழ்ந்த வருத்ததை கொடுத்தது.

என் தந்தை முந்தைய விபாசனா பாடநெறி வகுப்புகளில் வெற்றிகரமாக கலந்து கொண்டார். காலப்போக்கில் உணர்வுகள், பலவீனமாகி அவரது விழிப்புணர்வு மறைந்தது. அவர் மந்திரத்தை உள்ளடக்கிய தனது தினசரி இரண்டு மணி நேர மத மந்திரங்கள் ஜபிக்கும் நடைமுறைக்கு திரும்பினார். வீட்டிற்கு அவர் திரும்பி வந்ததும் இந்த மத சடங்குகளை பின்பற்றி மீண்டும் உணர்வுகள் பற்றிய விழிப்புணர்வை இழக்கலாம் என்ற கவலை இருந்தது. முகாமில் இருக்கும்போது லேசான உணர்வுகள் மற்றும் சில நேரங்களில் வலுவான உணர்வுகளின் விழிப்புணர்வில் வெற்றி பெற்றார். ஆனால் அவர் ஒய்வு கொள்ளும் போது அல்லது முதுகுவலியால் படுத்துக் கொள்ளும் போது, விழிப்புணர்வு மங்கியது. நான் அவரை மீண்டும் மீண்டும் தொடர்ந்து முயற்சி செய்யுங்கள் என ஊக்குவிக்க வேண்டியிருந்தது. அவர் வீடு திரும்பியதும், அவர் எப்போது என்னுடன் உட்கார்ந்து தியானம் மேற்கொண்டாலும் அவரால் மிகவும் ஆழமாக செய்ய இயவில்லை அவரது மத நடைமுறைகள் மற்றும் சடங்குகளிலிருந்து அவரால் விலகி இருக்க முடியாது என்பதை நான் உணர்ந்தேன். எனவே புறப்படுவதற்கு முன்பு நான் அவருக்கு குறைந்தபட்சம் மூன்று விபாசனா முகாம்கள் காலத்திற்கு மந்திரங்களிலிருந்து விலகி இருங்கள் என அறிவுறுத்தினேன். அவர் அதை எவ்வளவு தூரம் பின்பற்றுகிறார் என்பதை பொறுத்து இருந்து பார்க்க வேண்டும்...

என் அம்மாவின் நிலைமை வேறுபட்டது. அவளுக்கு ஏற்பட்ட நிலையான தலைவலி கணிசமாகக் குறைந்தது அவளுக்கு முகாம் மிகவும் நன்மை பயத்தது. அவளது விழிப்புணர்வு விபாசனா பயிற்சியில் மேம்பட்டது. 7 அல்லது 8 வது நாளுக்குள், அவள் மிகவும் நேர்த்தியான மற்றும் நுட்பமான உணர்வுகளை அனுபவித்தாள். நிச்சயமாக முடிவில் அவள் மிகவும் லேசாக உணர்ந்தாள். நான் அவள் எப்போதாவது திரும்பி அவளுடைய சடங்குகளில் தன்னை இழந்துவிடுவாள் என்று கவலைப்படவில்லை. என் பெற்றோரை அழைத்து வருவதன் மூலம் நான் என்னால் முடிந்தவரை என் கர்ம கடனை நிறைவேற்ற முயற்சி செய்கிறேன்.

தம்மத்தின் பாதைக்கு திரு.எம். அவருக்கான இரண்டாவது தியான படிப்பு இது. இந்த நேரத்தில் அவரது தியானத்தால் அவருக்கு முதல் தியான

படிப்பை விட அதிக நன்மை கிடைத்தது. இந்த ஆசீர்வதிக்கப்பட்ட தம்மத்திலிருந்து தனது முழு குடும்பமும் பயனடைய வேண்டும் என்று அவர் விரும்பினார். நான் அவரது குடும்பத்தினரை நிச்சயமாக சந்திக்க வேண்டும் என்று அவர் மீண்டும் மீண்டும் என்னிடம் வந்து கேட்டுக்கொண்டார். அவர்களுக்கு ஒரு எழுச்சியூட்டும் சொற்பொழிவை கொடுங்கள். விபாசனாவைத் தழுவி அவர்கள் ஈடுபட்டிருந்த தந்திர பாதை ஒதுக்கி வைப்பார்கள் என்றார். முன்பு பல முறை அவர் என்னிடம் கெஞ்சினார், ஆனால் நான் அவரது வீட்டிற்கு செல்ல முடியவில்லை. இப்போது நான் ஒப்புக்கொண்டேன். அவரது மகன் என்னை பம்பாய் தெற்கிலிருந்து சுமார் இரண்டு மணிநேர தூரத்தில் மலாடில் உள்ள அவர்களின் வீட்டிற்க்கு அழைத்துச் சென்றார். வழியில் நாங்கள் புறநகர்ப் பகுதியில் கட்டுமானத்தில் இருந்த அவரது புதிய வீட்டிற்கு சென்றோம். பின்னர் அவரது வீட்டை அடைந்தார். அவரது முழு குடும்பமும் கூடி இருந்தது. ஒரு சொற்பொழிவு நிகழ்த்தும் போது நான் அன்னை விசாகாவின் கதையை விவரித்தேன். ஒரு வீட்டுத்தலைவி தம்மத்தின் பாதையில் முன்னேறும் போது தனது பொறுப்புகளில் எப்படி எச்சரிக்கையாக இருக்கிறார் என்பதை எடுத்துக்காட்டினேன். தம்மத்தின் பாதையில் முன்னேற வீட்டை விட்டு வெளியேறுவது அவசியமில்லை. குடும்பப் பொறுப்புகளை கைவிட்டு துறவு வாழ்க்கை மேற்க்கொள்ள வேண்டியதில்லை. இறுதியில் குடும்ப உறுப்பினர்கள் பல கேள்விகள் கேட்டார்கள். மந்திரங்கள் மற்றும் நாம ஜபங்கள் தொடர்பான கேள்விகளும் இருந்தன. இறுதியாக, அவர்கள் மீண்டும் மீண்டும் அவர்களின் புதிய வீட்டில் ஒரு முகாம் நடத்துமாறு கோரினார்கள். அவர்கள் அனைவரும் பங்கேற்க முடியும் என்றார்கள். வேலை பளு அதிகமாக இருந்த காரணத்தால் அதற்கு நேரம் ஒதுக்க எனக்கு கடினமாக இருந்தது.

நான் முன்பு மெட்ராஸில் மாணவராக உள்ள திரு.ஆர். என்பவரை பற்றி குறிப்பிட்டிருந்தேன். சொற்பொழிவு நடைபெறும் போது மிகவும் வருத்தமாக இருந்தார். இருப்பினும், அந்த முகாமின் முடிவில், அவர் ‘தம்மிடம்’ ஆழமாக ஈர்க்கப்பட்டார், இப்போது அவர் தனது மனைவியுடன் பயிற்சிக்கு வந்தார். ஆரம்ப சில நாட்களின் போது முகாமிலிருந்து வேலை

நிமித்தம் வெளியே செல்ல வேண்டியிருந்தது. ஆனால் பின்னர் அவர் திவிர பயிற்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். இப்போது அவர் ஆழமான தியான பயிற்சியில் தேர்ச்சிபெற்றார். அவரது மனம் சுத்திகரிக்கப்பட்டது, தவறான கருத்துக்கள் என்ற முக்காடு நொறுங்கி உண்மை வெளிப்பட்டது. அவர் மிகவும் பயனடைந்தார். இறுதியில் என் அலுவலகம் வந்து அவர் என்னை சந்தித்தார். மற்றும் அவர் என்னை குனிந்து வணங்கி, அவரது தாய்க்கு பிறந்த கடனில் இருந்து விடுபட ஆசீர்வாதம் கேட்டார். நான் சொற்பொழிவின் போது, ஒரு குழந்தை பெற்றோர் கடனில் இருந்து எளிதாக விடுபட முடியாது. அவன் அல்லது அவள் பல பிறவிகள் அவர்களுக்கு சேவை செய்தாலும் அது கடினம் என்று சொன்னேன். எனினும், ஒருவர் அவர் பெற்றோரை தம்மத்தின் விடுதலை பாதையில் நடக்க உதவினால் பெற்றோர் கடனில் இருந்து விடுபட வழி இருக்கிறது, என்றேன் . தனது தாயை சாரநாத்தில் உள்ள முகாமுக்கு அழைத்து வர விரும்பும் தன் எண்ணத்தை வெளிப்படுத்தினார். அவர் ஒரு ஆனால் குடும்பத்தின் தவிர்க்க முடியாத சில நிர்பந்தங்களின் காரணமாக அவரால் அழைத்து வர முடியவில்லை, எதிர்காலத்தில் தியானபயிற்சிக்கு வரும் போது அவர் தனது தாயுடன் வருவதாகக் குறிப்பிட்டார்.

பிகானேர், ராஜஸ்தான் வசிக்கும் அவரது இரண்டு நெருங்கிய நண்பர்களுக்கும் சாரநாத்தில் வரவிருக்கும் பாடநெறி பற்றி தகவல் கொடுத்தார். இந்த ஆசீர்வதிக்கப்பட்ட வாய்ப்பு அவர்கள் அதிகம் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். முகாம் தொடங்க இருந்த நாளில் அவர்கள் மிகுந்த உற்சாகத்துடன் என்னைப் பார்க்க வந்தார்கள். அன்று மாலை, திரும்பி வருவதாக வாக்குறுதியளித்த அவர்கள் கலந்துகொள்ள இயலவில்லை என ஒரு செய்தியை அனுப்பினர். தாடியுடன் சாதுவை கற்பனையில் எதிர்பார்த்து அதற்கு பதிலாக ஒரு குடும்பஸ்தர் முகாமைத் தொடங்கவிருந்ததால் ஒருவேளை அவர்கள் என்னைப் பார்த்து ஏமாற்றமடைந்திருக்கலாம்.

ஒரு இளைஞரான திரு. எம். என்பவரால் சிறிது நேரம் கூட ஆனாபானாவின் போது கவனம் செலுத்த முடியவில்லை. மிகவும் குழப்பத்தில் உள்ளது போல் காணப்பட்டார். அவரிடம் காரணம் வினவிய

போது அவர் கால்களில் மற்றும் தொடைகள் வலி பற்றி புகார் கூறினார். அவர் கால்கள் கீழ் ஒரு தலையணையுடன் அமர்ந்தார். மூன்று நான்கு நாட்கள் விபாசனா பயிற்சிக்கு பிறகு காலில் ஏற்பட்ட வலி திடீரென்று காணாமல் போனது. அது அவரது ஆர்வத்தைத் தூண்டியது. அவர் எளிதில் ஒரு மணி நேரம் வலுவான உறுதிப்பாட்டுடன் (ஆதிதானத்தில்) உட்கார முடிந்தது. மற்றும் அவரது அமைதியற்ற மனம் அமைதியாகத் தொடங்கியது. அவர் மனம் அமைதியடைந்ததும் சொற்பொழிவுகளை மிகவும் ஆழமாக கவனித்தார். இறுதியில் வேறொரு முகாமில் மனைவியுடன் கலந்து கொள்ள வருவதாக தனது விருப்பத்தை வெளிப்படுத்தினார். அவர் எதிர்கால பயிற்சிப் படிப்புகளில் வருவார் என எதிர்பார்கலாம்.

திரு ஆர்.சி. ஒரு 10 நாள் விபாஸ்ஸானாவை பர்மாவில் மேற்கொண்டார். ஆனால் அவர் இந்தியா திரும்பியதும் அவர் மந்தரதந்திரத்தில் ஈடுபட்டார். மிகவும் குழப்பமான நிலையை அடைந்தார். ஒரு ஞானத்தின் விதை உள்ளே அமைந்திருந்தது. அவரது தந்தையார் கூறியதால் இந்த பயிற்சிபடிப்பில் அவர் கலந்துகொள்ள வந்தார். தாந்த்ரீக் மந்திரங்கள் அவரது மனதில் எதிரொலித்தன. அதனால் ஆரம்ப சிரமங்களை எதிர் கொண்டார். ஆனாபானாவின் போது அவர் அமைதியற்றவராக இருந்தார். மேலும் அவரது தலை வெடிக்கப் போவது போல் உணர்ந்தார். மூன்றாம் நாள் முடிவில் ஒளியைக் காணத் தொடங்கியது, அவர் முன்னேற்றத்தைக் குறித்தது. ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வரை பழைய மாணவர்களுக்கு விபாசனா பயிற்சி நான் கொடுத்திருந்தேன். ஆனால் ஆனாபானாவை தொடர்ந்து திங்கள் கிழமை வரை பயிற்சி செய்ய அவரை ஊக்குவித்தேன். அதன் மூலம் அவரது தடைகளில் இருந்து அவர் விடுபட முடியும். விபாசனாவில் நன்கு தேர்ச்சி பெற அவர் மேலும் ஒரு பாடத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

திரு. எல். தனது இரண்டாவது விபாசனா முகாமில் பங்கேற்றார். மிகவும் வெற்றிகரமாக பயிற்சி பெற்றார். மேலோட்டமான அவரது முந்தைய பாடத்தின் விபாசனா இப்போது ஆழமாக துளைத்து அவருள் ஓடியது. இப்போது அவரால் இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக உறுதியாக ஆனாபானாவில் உட்கார முடியும். பின்னர் அவர் என்னிடம் வந்து தனது

தம்பியைப் பற்றி தனிப்பட பேசினார். அவர் பாடநெறியில் சேர மிகவும் ஆர்வமாக இருந்தார். ஆனால் பணநிதிக் கட்டுப்பாடுகள் காரணமாக அவரால் சேர முடியவில்லை என்று கூறினார். இது எனக்கு நிறைய கவலை அளித்தது. உண்மையிலேயே, பெருநகரங்களில் எங்கள் முகாம்கள் விலை உயர்ந்தவை என்பதை நிரூபித்தன. 10 நாட்களுக்கு உணவு மற்றும் தங்குமிடச் செலவு நடுத்தர வர்க்கத்திலிருந்து வருபவர்களின் ஆர்வத்தை தடைசெய்யக்கூடியதாக இருந்தது. நடுத்தரத்தரம், அதற்கு கிழ் உள்ள பிரிவினர் தங்கள் வேலையிலிருந்து விடுப்பு எடுப்பதில் இருந்து மற்றும் முகாம்களுக்கான பண செலவுகளையும் மேற்கொள்ள வேண்டியதாயிற்று. இந்த முகாம்கள் பணக்காரர்களின் பிரத்யேக களமாக மாறக்கூடாது என்று நான் உணர்ந்தேன். மற்றும் குறைந்த செலவில் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். பம்பாய் போன்ற நகரங்களில் ரூ. 500 ஒரு விருந்தினர் மாளிகைக்கு வாடகைக்கு மட்டும் செலவிடப்பட்டது, ரூ. 100 முதல் 200 வரை சமையல் பாத்திரங்களில், பின்னர் மளிகை பொருட்கள் மற்றும் தொழிலாளர்களின் செலவுகள் செலவிடப்பட்டது. இச் செலவுகளை மேற்கொள்ளவது கடினம். மற்றும் அமைப்பாளர்கள் சுதந்திரமாக செலவழித்தார் என்றால் பின்னர் இன்னும் கடினம் அதிகமாகிறது . நிச்சயமாக, அதி பணக்கார பங்கேற்பாளர்களைக் கொண்டது எனில் உணவு தொடர்பான அவர்களின் எண்ணற்ற கோரிக்கைகளுடன் மற்றும் செலவில் அக்கறை இல்லாதவர்கள் செய்தார்கள் எனினும் பிரச்சனயே. விருந்தினர்கள் ‘வி.ஐ.பி’ என்ற அவர்களின் அணுகுமுறைக்கு வருந்தினேன். ஆனால் அவர்களுடன் உறுதியாக இருப்பது கடினம். அவர்கள் என் தந்தையை அவர்களாக முன்னோக்கி தள்ளுவார்கள். அது எனக்கு கடினமாக இருக்கும். ஆனாலும் இந்த தியான பாதை, பணக்காரர்களின் களமாக மாறக்கூடாது என்ற சிந்தனை என்னுடன் இருந்தது.

சாரநாத்தில் பாடநெறிக்குப் பிறகு, முகாம்களை ஏற்பாடுகள் செய்வதில், நான் பெரிதும் கவனமாக இருந்தேன். குறைந்த செலவுகளுடன் ஏற்பாடு செய்வதால் கிழ் மட்டத்தில் உள்ள பிரிவினர் சுதந்திரமாக பங்கேற்க அது ஊக்குவிக்கிறது. இந்த ஏற்பாடுகள் நிம்மதியை அளித்தது. இப்போது உள்ள

ஏற்பாடுகளின் மூலம் இந்த பாடநெறி கட்டணம் பம்பாய் விட டெல்லியில் அனைவருக்கும் ஏற்றதாக இருக்கும் என்று நம்புகிறேன்.

ஞாயிற்றுக்கிழமை இறுதி சொற்பொழிவு தம்ம மண்டபத்தில் 6:30 முதல் இரவு 7:00 மணி வரை கடைசி நாளில், நடைபெற்றது. இந்த முறை அங்கு வழக்கத்திற்கு மாறாக அதிக எண்ணிக்கையிலான மக்கள் பங்கேற்று இருந்தனர். தியானத்தின் 10 நாட்கள் சக்தியே இதற்கு காரணம் என உணர்ந்தேன். தம்மம் சொற்பொழிவு கேட்போரை அதில் லயிக்க தூண்டியது. மற்றொரு பாடத்திட்டத்தை ஏற்பாடு செய்ய வேண்டும் என பலரும் கோரிக்கைகள் விடுத்தனர்.

சொற்பொழிவு முடிந்ததும், மற்றொரு பிரச்சனை என் முன் தோன்றியது. தியானிப்பவர்கள் கைகள் மடித்தும் குனிந்தும் என்னை வணங்குவார்கள். தம்மத்தை பெற்றதால் தம்மத்திடம் இருக்கும் மரியாதை என்றே நான் அவற்றை எடுத்துக்கொள்கிறேன். எனவே மிகவும் வயதானவர்கள் கீழே குனிந்து தலைவணங்கும்போது கூட அது எனக்கு சங்கடமாக இல்லை. அவர்கள் எனனை வணங்குவதில் தம்மத்திடம் அவர்களுக்கு உள்ள மரியாதையை, நான் பார்க்கிறேன். மரியாதையைக்குரிய என் குரு சயாகியின் தம்மம் பிரதிநிதியாக நான் நிறைவேற்றும் தம்மபணிக்கு அவர்கள் அளிக்கும் மரியாதையை, அதில் நான் பார்க்கிறேன். ஆனால் என்னிடமிருந்து தம்ம-தானா பெறாத மக்கள் வந்து என் கால்களை தொட்டு இந்திய வழக்கப்படி என்னை வணங்கும் போது நான் வித்தியாசமாக உணர்கிறேன். பர்மிய மக்கள், யாராவது தனது மரியாதையை வெளிப்படுத்த விரும்பினால் ஐந்து உடல் பாகங்களைத் தரைத்தளத்தில் படும் படி வணங்கும் பழக்கும் உள்ளனர். ஆசிரியரின் பாதங்களை தொடும் பழக்கம் இல்லை. சொற்பொழிவு முடிந்ததும் மரியாதையை வெளிப்படுத்த விரும்வுபவர், பர்மிய மக்கள் போன்று வணங்கும் முறையை வரவேற்க்கிறேன்.

ஒன்றரை நாள் பம்பாயில் தங்கிய பிறகு, நான் ரயிலில் நாக்பூருக்கு புறப்பட்டேன். எனது பழைய நண்பர்கள் குமார் , ஹரிராம் மற்றும் சிலரும் என்னை ரயில் நிலையத்தில் வழி அனுப்ப வந்தார்கள். [மாமனார் கிர்தாரி, கோயங்காஜியின் மூத்த மகன்]. அவர்கள் பங்கேற்க விரும்புவதால் பம்பாயில்

மேலும் ஒரு முகாம் ஏற்பாடு செய்யும் படி கேட்டுக் கொண்டார்கள். இதை நான் அவர்களிடம் சொன்னேன்- என் உறவினர்களுக்கு, நண்பர்கள் மற்றும் அவர்களைப் போன்றவர்களுக்கு- மிக அருமையான நகையான தம்மத்தின் இந்த பரிசை கொடுக்க நான் இங்கே இருந்தேன். யாருக்கு தெரியும் எப்போது அவர்களின் ஆசை நிறைவேறும் என்று.

பம்பாய் பாடநெறியின் முடிவில், அனைத்து ஜிவராசிகள் மற்றும், தேவர்கள் என ஆதரவும் பாதுகாப்பும் அளித்த அனைவருடனும் முகாம் மூலம் பெறப்பட்ட நற்பலன்களை நான் பகிர்ந்து கொண்டேன். மரியாதைக்குரிய குரு சயாகி மற்றும் தாய் சயாமா அவர்களின் ஆசீர்வாதங்களும் மெட்டாவும் முகாம் செவ்வனே நடைபெற துணை புரிந்தது என என் நன்றியை தெரிவித்தேன். பின்னர் பர்மாவில் உள்ள அனைவரும், இந்திய நண்பர்கள் மற்றும் கூட்டாளிகள் ஆதரவு மற்றும் நல்வாழ்த்துகளும் முகாம் வெற்றிகரமாக நடை பெற உதவின என நன்றியை தெரிவித்தேன்.

சொற்பொழிவின் போது, வீடு உரிமையாளர்கள் நெமானி சகோதரர்கள் பெரும்பாலோர் சொற்பொழிவினை கேட்க வந்து இருந்தனர். பின்னர், அவர்கள் மற்றொரு பாடத்திற்கான தங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்தினர். நான் மாணவர்களை திசை திருப்புவதைத் தவிர்ப்பதற்கு சுவர்களில் தொங்கிய மூதாதையர்களின் பெரிய படங்களை துணியால் கொஞ்சம் மூடி இருந்தேன். அந்த படங்களை உள்ளடக்கிய வெள்ளை, கவசம் போன்ற திரைச்சீலைகள் இன்னும் அங்கே தொங்கிக்கொண்டிருந்தன . ஆனால் வலுவாக தம்ம உணர்வு கொண்ட இந்த நெமானி குடும்ப உறுப்பினர்களுக்கு இந்த நடவடிக்கை வருத்ததையோ எதிர் மறை எண்ணங்களையோ தரவில்லை. அத்தகைய, தம்மத்தை நோக்கி ஆர்வமுள்ள மக்களுக்கு நிச்சயமாக தம்ம-தானா அளிக்கப்பட வேண்டும்.

உங்கள் சகோதரன்,

சத்ய நாராயண் கோயங்கா

(பாபு பஹியாவுடனான கடிதப் பரிமாற்றத்தின் பகுதிகள்) ...

தொடரும்...

**சுய சரிதம் தொடர்கிறது**.

இதுவரை சொல்லப்பட்ட குட்டி சம்பவங்கள், உலகப் புகழ்வாய்ந்த மாண்புமிகு திரு. கோயங்கா அவர்களின் வாழ்க்கையில், உண்மையான அறநெறியை அவர் அடைவதற்கு முன்னர் நிகழ்ந்தனவாகும். தற்போது நாம், அவர் இந்தியாவில் நிகழ்த்திய தம்மா வகுப்புகளைக் குறித்து பார்ப்போமா?. இவை அவரது சுய சரிதத்திலிருந்து எடுக்கப்பட்டது, அதுவே நமக்கு புத்துணர்வு அளிக்கும். - செய்தி மடல் பகுதி 18

## எப்போதும் மாறும்-யதார்த்தத்தின் கோட்பாடு

சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு விபாசனா முகாம் குஜராத்தின் கட்ச் மாவட்டத்தில் நடைபெற்றது. மக்களை மதம் ஒன்றிலிருந்து ஒழுங்கமைக்கப்பட்ட இன்னொரு மதம் மாற்றும் நோக்கத்துடன் விபாசனா கற்பிக்கப்படவில்லை. மாறாக ஏங்குதல் மற்றும் வெறுப்பு போன்ற மன அசுத்தங்கள் அகற்றுவதே அதன் நோக்கம் என்ற உண்மை தன்மை பரவியது. அனைவராலும் பயிற்சி முலம் நடைமுறை படித்தி அதன் உடனடி நன்மைகளை அனுபவிக்க முடிந்தது. பாடநெறிகளில் சடங்கு முறைகளோ, சமய நெறிகளோ இல்லை. இந்த உலகம் அல்லது அதற்கு அப்பாற்பட்ட உலகத்தின் ஈர்ப்புகள் தொடர்பான தவறான வாக்குறுதிகள் எதுவும் இதில் கொடுக்கப்படவில்லை என்பது அனைவராலும் தெளிவாக உணரப்பட்டது. கண்மூடித்தனமாக கொடுக்கப்பட்ட தத்துவத்தைப் பின்பற்றுவதற்கான முறையீடு எதுவும் இல்லை. பிரம்மா தலைவர்,அவரே அனைவரையும் வழிநடத்துபவர் என்ற மிகைப்படுத்தப்பட்ட எந்தவொரு கூற்றுகளும் சொல்லப்படவில்லை. உயர்த்துவதற்கு குருட்டுத்தனமாக நம்பிக்கையை வைக்கக்கோரி அவர்களை குழப்பமடையச் செய்வதில்லை. தியான படிப்புகள் ஆசிரியருக்கோ அல்லது அமைப்பாளர்களுக்கோ எந்த சுயநல நோக்கத்திலும் ஏற்பாடு செய்யப்படவில்லை. அனைவரின் நலன் ஒன்றே குறிக்கோள் என்ற நோக்கத்தில் ஏற்பாடு செய்யப்படுகின்றது என்று அறியப்பட்டது. ஏக்கம், வெறுப்பு போன்ற மன தீட்டுக்களை தீவிரமாக பலவீனப்படுத்தி முற்றிலுமாக ஒழிக்க மேற்க்கொள்ளப்படும் நுட்பமான உத்தி முறை என்று விபாசனா

பங்கேற்பாளர்கள் நிச்சயமாக அறிந்தனர். சமய நம்பிக்கைகளை கண்முடித்தனமாக ஏற்க்காமல் விஞ்ஞான நுட்பம் மூலம் மாணவரின் நேர்மையான பயிற்சியுடன் உடனடியாக பயன் தருவது இது.

இந்த எளிய மற்றும் நேரடியானதை கற்பித்தல் தொடர்பான உண்மையை மெய்பித்து காட்டுவதால் குடும்பஸ்தர்கள் மட்டுமல்ல- சந்நியாசிகள், பிக்குக்கள் மற்றும் பிக்குனிகள், பாதிரியார்கள் மற்றும் கன்னியாஸ்திரிகள் பல்வேறு பிரிவுகள் மற்றும் மதங்களில் உள்ளவர்கள்- அதிக அளவில் முகாம்களில் சேர்ந்தனர். இது உண்மையை எடுத்துக்காட்டுகிறது. தியானப்பயிற்சி எந்த ஒரு சமூகத்தினருக்கோ அல்லது பிரிவுக்கோ மட்டுமல்ல எல்லோரும் கோபம், ஏங்குதல், வெறுப்பு மற்றும் பிற மன தீட்டுக்களில் இருந்து விடுபட கற்பிக்கப்படுகிறது. மனதீட்டுக்கள் நீடிக்கும் வரை, ஆரோக்கியமற்ற செயல்கள் வாய்மொழி அல்லது உடல் ரீதியாக நிகழ்ந்த வண்ணமே இருக்கும். நல்லெண்ணம், இரக்கம், பச்சாத்தாபம் இவை மன தூய்மை இல்லாமல் உள்ளே எழ முடியாது. ஒவ்வொரு மத பாரம்பரியமும் ஒழுக்கம் மற்றும் ஒரு மன நல்லொழுக்கம் , ஆரோக்கியமான நிலை போன்றவை மேம்படுத்தும் உயர்வான வாழ்க்கையை ஊக்குவிக்கிறது. விபாசனா இதை அடைவதற்கான வழியைக் காட்டுகிறது. ஒரு முகாம் அல்லது இரண்டில் கலந்துகொள்வதால், இறுதி இலக்கை எட்டும் சாத்தியமில்லை. ஆனால் அவர் விடுதலை பாதையில் படிப்படியாக முன்னேறிச் செல்ல வழி புலப்படுகிறது.

கிட்டத்தட்ட 40 க்கு மேற்ப்பட்ட ஒரு குறிப்பிட்ட பிரிவைச் சேர்ந்த சந்நியாசிகள் மற்றும் கன்னியாஸ்திரிகள் சுமார் 150 மைல்கள் நடந்து ஒரு முகாமில் பங்கேற்பதற்க்கு வர இதுவே காரணம். இருப்பினும், முகாம் தொடங்குவதற்க்கு சற்று முன்பு அவர்களின் சங்கத்தின் தலைவர் குடும்பஸ்தர், அவர்கள் மீது தன் கோபத்தை காட்டினார். 'நிலயாமையான தம்மத்தை, குடும்பஸ்தரிடம் இருந்து எப்படி கற்றுக்கொள்ள இயலும் என்று நீங்கள் திர்மானித்திர்கள்' என அவர்கள் வெட்கும் படி கேள்வி எழுப்பினர். 'வேறு ஒரு மதத்தவரிடமிருந்து தம்மத்தை பயின்றால் நம் மதத்தின் தம்மம் என்னாவது?' என்றார். குறிப்பிட்ட சங்கத்தின் தலைவர், ஒரு குடும்பஸ்தர், அவருடைய பணத்தின் பலத்தால் சந்நியாசிகள் மற்றும்

கன்னியாஸ்திரிகளைக் கட்டுப்படுத்தினார். இது மிகவும் துரதிர்ஸ்டவசமானது. அவர் விரும்பினால், ஒரு குறிப்பிட்ட துறவிகளுக்கு தானா அல்லது பிக்ஷா ஓய்வறைகளில் தங்குமிடம் கொடுக்கக்கூடாது, என சமூகத்தில் அறிவிக்க முடியும். இந்த துறவிகள் கட்டுப்படுத்தப்பட்டதால், முகாமில் சேர பல மைல்கள் நடந்து இருந்தபோதிலும் கலந்து கொள்ள வேண்டாம் என்று முடிவு செய்ததில் எந்த ஆச்சரியமும் இல்லை.

மற்றொரு மத சமூகத்தைச் சேர்ந்த சில கன்னியாஸ்திரிகள் முகாமில் சேர்ந்தனர். மூன்றாவது நாள் மாலை சொற்பொழிவின் போது 'ப்ரஞ்ஞா' வை விளக்கும் போது, நான் சொன்னேன். முழு உடல் மற்றும் மனம் ஒவ்வொரு கணத்திலும் மாறும், மற்றும் மிக விரைவாக மாறுவது அது, ஆனால் அதே உடல், அதே இருப்பது என்றே ஒருவர் உணருகிறார். எடுத்துக்காட்டாக இது ஒரு விளக்கில் உள்ள சுடர் போன்றது என்று நான் சொன்னேன். ஒவ்வொரு கணமும் மிக விரைவாக உயர்ந்து, மறைந்து புதிய சுடர் வருகிறது. அதே சுடர் என்று நாம் நம்புகிறோம். மின்சார பல்பை ஒளிரவைக்கும் ஒரு மின்சாரம் போன்றது இது. மிக விரைவான மின்னோட்டம் தொடர்ந்து நகர்ந்து வருவதால் பல்பு ஒளிர்கிறது. நிலையான அதே மின்னோட்டம் என்று நம்புகிறோம். எப்போதும் ஓடும் நதி, அதே நீர் என்ற உணர்வை ஏற்படுத்துகிறது, ஆனால்,உண்மையில் அவ்விதம் இல்லை. அந்த நீர் பாய்ந்தது மற்றும் புதிய நீர் ஆற்றில் நுழைகிறது. அதேபோல், வாழ்க்கை வேகமாக ஒவ்வொரு கணமும் மாறுகிறது. அது ஒரே வாழ்க்கை என்று நாம் நினைக்கிறோம். ஒரு குழந்தை பிறந்து இளைஞனாக மாறுகிறது, பின்னர் இன்னும் வயது முதிர்ச்சியடைந்து வயோதிகனாகி பிறகு இறந்துவிடுகிறது. இந்த மாற்றம் ஒவ்வொரு கணமும் நிகழ்கிறது. எப்போதும் மாறிவரும் இந்த நிகழ்வுகளை உணராமல் நாம் நிகழ்வுகளுடன் 'நான்' மற்றும் 'என்னுடையது' என்று ஒட்டிக்கொண்டிருக்கும் போது வெறுப்பு மற்றும் ஒட்டுதல் எழுகின்றது.

இந்த தத்துவத்தை நான் விளக்கிக் கொண்டிருந்தபோது முன்னால் அமர்ந்திருந்த கன்னியாஸ்திரிகளின் தலைவி ஏதோ ஒரு சங்கடத்தில் இருப்பதை போல் நான் உணர்ந்தேன். மறுநாள் அவள் என்னை சந்திக்க வந்தாள். அவள் , "புத்தரின் கொள்கைகளை பின்பற்றுபவர்கள், 'ஒவ்வொரு கணத்திலும் மாறும் யதார்த்தத்தின் நிகழ்வுகளை' நம்புபவர்கள் என்று

நாங்களும் கேள்விப்பட்டோம். இன்னும் என்னவென்றால், நீங்கள் அவர்களைப் போல இல்லை தம்மின் உண்மையான மற்றும் தூய்மையான அம்சத்தை மாணவர்களுக்கு வெளிப்படுத்துகிறிர்கள்' என்றும் கேள்விப்பட்டோம். ஆனால் நேற்றைய பேச்சில் நீங்கள் அதிகம் 'எப்போதும் மாறக்கூடிய தன்மை' என்ற இந்த தத்துவத்திற்கு முக்கியத்துவம் வைத்தீர்கள். அத்தகைய சூழ்நிலையில் நாம் தியானிப்பது மிகவும் கடினம்" என்றார். நான் திகைப்படைந்தேன்.

'எப்போதும் மாறிவரும்-உண்மை'(க்ஷானிக்வாத்)) தத்துவத்தினை நம்புபவர், 'இந்த நிகழ்வுகளிலிருந்து வெளியேற வழி இல்லை. இந்த மாற்றம் இந்த யதார்த்தத்திற்கு அப்பால் எதுவும் இல்லை. இந்த மாற்றம் நிலையானது, நிரந்தரமானது என்பர்'. ஆனால் விபாசனா 'ஒருபோதும் மாறாது, எப்போதும் நிரந்தரமாக' இருக்கும். உங்களை அந்த இலக்குக்கு அழைத்துச் செல்லும்' என்று நான் விளக்கினேன். அவள் ஆச்சரியப்பட்டு, "புத்தரைப் பின்பற்றுபவர்கள் நித்திய, மாறாததை நம்பவில்லை என்று கேள்விப்பட்டோம்' என்றார். 'அனைத்தும் எப்போதும் மாறிக்கொண்டே இருக்கும்', இந்த புத்த தத்துவம் எங்களுக்கு கற்பிக்கப்பட்டுள்ளது' என்றார்.

எனவே நான் மீண்டும் விளக்கினேன். நிரந்தரமற்ற எப்போதும் மாறிவரும்-யதார்த்தம் அனுபவ நிலையில் அறியப்பட வேண்டும். அப்பொழுது அதன் மீது உள்ள பற்றிலிருந்து விலக இயலும். எப்போதும் மாறக்கூடிய நிகழ்வுகளை 'நான்', 'என்னுடையது' அல்லது 'என் ஆத்மா.' என ஒருவர் அதை நம்பி ஏமாறுதல் தவறு. அனுபவ நிலையில் உள்ளம் சமநிலையில் ஆழமடையும் போது ஏங்குதல் மற்றும் வெறுப்பின் மீதுள்ள பற்று பலவீனமடையும். மேலும் ஏக்கம் மற்றும் வெறுப்பை நோக்கி பற்றுதல் குறையும் போது நிரந்தரத்தை நோக்கி நகர்கிறோம்

மனம் ஆசை, வெறுப்பு போன்ற அத்தகைய அசுத்தங்களால், நிறைந்திருக்கும் போது நிரந்தர, மாறாத நிலை இலக்காக இருந்தாலும் அதை உணர இயலாது. அந்த நிலையை கற்பனை செய்து பார்க்க முடியாது, அது அனுபவிக்கப்பட வேண்டும், மேலும் தூய்மையற்ற தன்மை, இலக்கை சென்றடைய முக்கிய தடையாகும். இந்த பயிற்சிப் போதனை அந்த தூய்மையற்ற தன்மையை ஒழிக்க வழி காட்டும். 'எப்போதும் மாறிவரும்

நிகழ்வுகள் மட்டும் தனியாக இங்கே கவனம் செலுத்தவில்லை, உண்மையில் நிரந்தரமானதை நோக்கியே, எல்லா முயற்சிகளும் உள்ளன', என்ற கருத்தை தலைமை கன்னியாஸ்திரி ஏற்றுக்கொண்டார். பத்து நாட்களின் முடிவில் இக் கருத்தை உறுதியாக ஒப்புக்கொண்டார். கருத்து, நன்கு புரிந்ததால் அவர் நன்றாக முன்னேறினார்.

புத்தரின் போதனைகளில் உள்ள 'ஒவ்வொரு கணமும்' மாற்றங்கள் நிகழும் -என்ற உண்மை தத்துவத்தை குறை சொல்வது, தவறான குற்றச்சாட்டு. ஆதாரமற்றது. 'இடைக்கால நிகழ்வுகள்' அல்லது 'துன்பமே உண்மை' என்ற நம்பிக்கை உள்ளவரின் குற்றச்சாட்டு அது . "சர்வம் துக்கம், துக்கம், க்ஷனிக்கம், க்ஷனிக்கம். " - "எல்லாம் துன்பம், துன்பம், ஒவ்வொரு கணம், ஒவ்வொரு கணமும்"- எந்த விவேகமற்றவர் இதை பேசினார் என்பது யாருக்குத் தெரியும். பின்னர் பொய்யாக இது புத்தரின் போதனை என மேற்கோள் காட்டுவர்.

புத்தர் பேசிய உண்மையை சரியாக எடுத்து முன்வைக்க யாரும் இல்லை. ஆதலால், தவறான பிரச்சாரம் சாத்தியமானது. புத்தரின் அசல் போதனை பிரதிகளோ, அக்காலத்தில் கையாண்ட விபாசன நுட்பமோ கிடைக்கவில்லை. உண்மையான கருத்தை முன்வைக்க யாரோ முயற்சிகள் செய்திருக்கலாம். ஆனால் ஒரு பொது அரங்கில் கடுமையான எதிரிகளால் தத்துவ வாதங்கள் போடப்பட்டபோது , ஒரு சிறிய புல்லாங்குழல் சத்தம் ஒரு பெரிய இசைக்குழுவின் சத்ததின் முன் மங்கிப் போவது போல பலவீனமான தொகுப்பாளரின் வாதம் கேட்கப்படாமல் போய்யிருக்கலாம்.

இருப்பினும், வரலாற்றில் இந்த அனுமானங்கள் புதைக்கப்பட்டன. இன்று, நம் நாடு விபாசனாவை மீண்டும் ஒரு முறை வரவேற்கிறது. அசல், தூய்மையான புத்தரின் போதனைகள் மீண்டும் கிடைக்கின்றன. இவற்றைப் பயிற்சி செய்து படிக்கும்போது, -ஒவ்வொரு கணமும்' மாறும். 'யதார்த்தத்தை நோக்கியே புத்தரின் போதனைகள் உள்ளதாக தவறான நம்பிக்கைக்கு இரையாகாகக் கூடாது.

தற்காலிக, கடந்து செல்லும் உண்மை- ஒருபோதும் நிரந்தர, பிரிக்க முடியாத யதார்த்தமாக கருதக்கூடாது. அனிச்சாவை தேடி,

நிலையில்லாததை நித்யா என தவறாக ஏற்றுக் கொள்ளக் கூடாது. மாறாத, எப்போதும் இருக்கும்-உண்மை- மனம், பொருள், புலன்களுக்கு அப்பாற்பட்டது. ஒருவர் சரியான கவனத்துடன் செயல்படும்போது அது வெளிப்படும்.
ஏங்குதல் மற்றும் வெறுப்பு ஆகியவற்றில் மூழ்கியிருக்கும் மனதின் நடத்தை முறையை மாற்ற எண்ணற்ற பிறவிகள், வாழ்நாள் முழுவதும், பயிற்சி மேற்க்கொள்ள வேண்டியிருக்கிறது. அனுபவ நிலை அனிச்சாவின் யதார்த்தம் ஒவ்வொரு கணமும் மாறும் நிலையில்லாமை, அதைத் தாண்டி நிரந்தர யதார்த்தம் ஒருபோதும் மாறாத உண்மை தன்னை வெளிப்படுத்துகிறது, பின்னர் அவர் அதை அவ்விதமே ஏற்றுக்கொள்வார். விபாசனாஅதற்கு நமக்கு வழியைக் காட்டுகிறது.

(திரு. எஸ்.என். கோயங்காவின் சுயசரிதையிலிருந்து) -

தொடரும்.

## தம்மிக் மறைவு

7 செப்டம்பர் 2020 காலை 11 மணியளவில் ஆசிரியர், துலேவின் நாராயண் ஓ. பாட்டீல், மகாராஷ்டிரா, புனேவில் அமைதியாக காலமானார். அவருக்கு 75 வயது. 1987 இல், அவர் தனது விபாசனா பயிற்சியைத் தொடங்கிய சிறிது காலத்திலேயே 16 ஆண்டுகளாக இருந்த தனது அரசாங்க உத்யோகத்திலிருந்து சுய வேலைவாய்ப்பை விரும்பி ஓய்வு பெற்றார்.. மற்றும் தம்ம பணியில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். 1991 இல் உதவி ஆசிரியராக நியமிக்கப்பட்டார். 1997 ஆம் ஆண்டில் ஆசிரியர், பல வரலாற்றில் குறிப்பிடதக்க பல பயிற்சி வகுப்புக்களை நடத்தினார், அதாவது பல பயிற்சி வகுப்புக்கள் பார்வையற்றவர்களுக்கும் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்படுபட்டவர்களுக்கும், சிறைச்சாலைகளில் இருப்பவர்களுக்கும் நடத்தி சேவையாற்றினார். தம்மகிரி மற்றும் தம்ம தபோவனா ஆகியவை உருவாக உதவினார். துலே, தம்ம சரோவர் வளர்ச்சியில் முழு மனதுடன் அவரது மனைவி ராமாவுடன் சேர்ந்து பங்களிப்பு அளித்தார். அவர் தொடர்ந்து தம்ம பாதையில் முன்னேற்ற தம்ம குடும்பத்தினர் வாழ்த்துகின்றனர்.

அவர் அமைதியும், மகிழ்ச்சியும், பெறட்டும். விடுவிக்கப்படட்டும்.